DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 60/2023 |
| Deposition of witness | : | PW – 8 |
| Name | : | குமார் |
| Father's /Husband Name | : | மாரியப்பன் |
| Village | : | நன்னிலம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 56 |
| Occupation | : | சிறப்பு உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 17th day October 2024. Accused A1 present. A2 absent petition u/s 355 BNSS filed and allowed.

**முதல் விசாரணை:–**

நான் தற்போது நன்னிலம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 16.01.2023 ம் தேதி நன்னலிம் காவல் நிலைய பொறுப்பிலிருந்தபோது திருவாரூர் அரசு மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற தகவலை பெற்று அங்கு உள்நோயாளிக்கு சிகிச்சையிலிருந்த வெங்கடேஷ் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று வந்து நன்னிலம் காவல் நிலைய குற்ற எண். 9/2023, சட்டப்பிரிவுகள் 294(b), 323, 506(2) இதச–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.6 பின்பு** அவர் இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 16.01.2023 ம் தேதி காலை 12 மணிக்கு இவ்வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் மனிமாறன், விஜய் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் வரைந்துள்ளார். அவை முறையே **அ.சா.ஆ.7** மற்றும் **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னிட்டு சாட்சிகள் 1 முதல் 6 வரை ஆகியோர்களை விசாரணை செய்து தனிதனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். எனது விசாரணையில் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகள் இருவரையும் 16.01.2023–ம் தேதி பகல் 11.30 மணிக்கு தென்னஞ்சாரு அருகே இருந்தவரை அடையாளம் கண்டு பின்பு காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்பு அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் பிரதிபா, சரன்பிரஷாத் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது விசாரணையில் அ.சா.1 க்கு ஏற்பட்ட காயமானது கொடுங்காயம் என்று மருத்துவர் சான்று வழங்கியதால் இவ்வழக்கின் சட்டப்பிரவுகளை 294(b), 324, 506(2) இதச ன் படி சட்டப்பரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்தேன். அந்த சட்டப்பிரவு மாறுதலறிக்கை **அ.த.சா.ஆ. 9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இத்துடன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது குற்ற அறிக்கை நீதிமன்றத்தில்

தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

அரசு மருத்துவமனையிலிருந்து தகவல் அளித்ததற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் விபத்து பதிவேட்டில் தாக்கல் செய்துள்ளேன். எதிரி வினோத் அ.சா.1 வெங்கடேசை இடது தோல்பட்டையிலும் வலது இடுப்பிலும் அடித்ததாக கூறியுள்ளார். எதிரி செல்லப்பாண்டியன் அ.சா.1 ஐ கையில் அடித்தாக கூறியுள்ளாரா என்றால் இல்லை. கம்பு என்பதும் கட்டை என்பதும் வேறு வேறு என்றால் சரிதான். அ.சா.2 ரவி எதிரி வினோத் கம்பால் அடித்ததாகவும், எதிரி செல்லப்பாண்டி விசாரணையில் கூறியுள்ளார் என்றால் சரிதான். சாட்சிகள் அ.சா.1 ஐ எதிரிகள் கையில் அடித்ததாக கூறவில்லை என்றால் சரிதான். மருத்துவர் அவரது வாக்குமூலத்தில் அ.சா.1 ன் தந்தை பெயரை மாற்றி கூறியுள்ளார் என்றால் சரிதான். நான் சொல்வது போல் கண்ணுற்ற சாட்சிகள் யாரும் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் அ.சா.1 ஐ கையில் தாக்கவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகசரை எத்தனை மணிக்கு தயார் செய்தேன் என்றால் பகல் 12 மணிக்கு தயார் செய்தேன். மாதிரி வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள வீடுகளிலுள்ள நபர்களை சாட்சியாக விசாரித்துள்ளேனா என்றால் இல்லை. ஏன் அவர்களை விசாரிக்கவில்லை என்றால் அவற்றில் சில வீடுகள் பூட்டியிருந்தாலும் சில நபர்கள் சம்பவத்தை பார்க்காததாலும் அவர்களை சாட்சியாக விசாரிக்கவில்லை. பார்வை மகசர் பதிவு செய்த பிறகு சாட்சிகளை எத்தனை மணி வரையில் விசாரித்தேன் என்றால் 1 மணி வரை விசாரித்திருப்பேன். சாட்சிகளை விசாரித்த பின்பு தான் வழக்கின் உண்மை நிலை தெரியவந்து எதிரிகளை உறுதி செய்ய முடியும் என்றாலும் அதன் பிறகு தான் எதிரிகளை கைது செய்ய இயலும் என்றால் சரிதான். எதிரிகளை எத்தனை மணிக்கு கைது செய்துள்ளேன் என்றால் 11.30 மணிக்கு கைது செய்துள்ளேன். நான் சட்டத்திற்கு விரோதமாக கைது செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் ஆயுதங்கள் எதுவும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் விசாரணை தொடங்கி சாட்சிகளை விசாரிப்பதற்கு முன்பே எதிரி கைது செய்யப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. நானே முதல் விசாரணை பதிவு செய்து விசாரணை செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்திருப்பது சட்ட விதிகள் மற்றும் இயற்கை நீதிக்கு புறம்பானது என்றால் சரியல்ல. ஆயுதமே இல்லாத இவ்வழக்கில் எதிரிகள் வாதியை தாக்கினார் என்று கூறுவது முரனானதும், சாட்சிகள் சொன்ன ஏதோ முன்விரோதம் காரணமாக இவ்வழக்கில் எதிரிகளை தவறாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் வாதிக்கு ஏற்பட்ட காயத்திற்கும், எதிரிகளுக்கும், சம்பவ நாளுக்கும் எந்த தொடர்பில்லை என்றால் சரியல்ல.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.